வெள்ளி | டிசம்பர் 1

📖 மாலை வாசகம் - சங்கீதம் 15:1 – 5

# நீங்கள் தேவ பக்தியுடையவர்களா?

தேவ பக்தியானது எதனால் அளவிடப்படும்? மனிதர்கள் பல சடங்கா ச்சாரங்களை செய்து வருகின்றார்கள். தாங்கள் கற்றுக் கொண்ட கொள் கைகள், கோட்பாடுகள், மற்றும் உபதேசங்களை உறுதியாய் நம்புகின் றார்கள். இவைகளைச் செய்கின்றவர்கள் இந்த உலகிலே மதப்பற்றுள் ளவர்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள். இவைகளை மனிதர்கள் செய்வதினாலே, இந்த உலக மனித ர்களினால், அவர்கள் தேவபக்தியு ள்ளவர்கள் என்ற பெயர் பெறுகி ன்றார்கள். அதனால் மனிதனுக்கு என்ன இலாபம்? தேவனுடைய பார் வையிலே தேவபக்கியுள்ளவன் யார் என்பதைக் குறித்து இன்று தியானிப்போம். உண்மையான தேவபக்தியுள்ள விசுவாசியானவன், தேவனை ஆராதிக்கும்படி தேவ ஆலயத்திற்கு செல்கின்றான். அத னால், தேவ ஆலயத்திற்கு செல் பவர்கள் எல்லோரும் தேவ பக்தியு ள்ளவர்களா? ஒரு மனிதனானவன், தேவனுடைய நியமங்களை சடங் காரச்சாரமாக செய்து வருவதினால், அவனுக்கு பலன் என்ன? இதை எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? நீங்கள் மதப்பற்றுள்ளவர்க ளாக இருக்கும்படி ஆரம்பித்த நாளிலிருந்து, உங்கள் வாழ்விலே உண் டான மாற்றங்கள் என்ன? உள்ளான மனிதனிலே மாற்றங்கள் உண்டா? உள்ளான மனிதனிலே உண்டான மாற்றங்கள் வெளியான நற்கனிக ளைக் கொடுக்கின்றதா? உங்களுக்குள் உண்டாயிருக்கும் தேவ பக்தி யானது, உங்களில் பெருமையை உண்டாக்கியிருக்கின்றதா? அல்லது மனத் தாழ்மையையும், சாந்தத்தையும் உண்டாக்கியிருக்கின்றதா? சிலர் தங்களை தேவ பக்தியுள்ளவர்கள் என்று பெருமைபாராட்டிக் கொள்கின் றார்கள். ஆனால், அந்த பக்தியை தேவனாகிய கர்த்தர் அங்கிகரிக்க வில்லையென்றால், அது அவனுடைய வாழ்விலே மனிதர்களுடைய அங்கிகாரத்தை பெற்ற வெறும் மதப்பற்றாகவே இருக்கும். கர்த்தருக்கு பயந்து அவருடைய வழியிலே நடக்கின்றவன் தன் இருதயத்தை பொல்லாப்புச்கு விலக்கி காத்துக் கொள்கின்றான். அதனால் அவன் கையிட்டு செய்யும் கிரியைகளிலே தேவநீதி காணப்படும். கிறிஸ்து வில் இருந்த சிந்தையே அவனுக்குள் எப்போதும் இருப்பதினால், மனி தர்கள் மேன்மைபாரட்டும் கிரியைகளல்ல,தேவன் விரும்பும் நற்கனிகள் அவனுடைய நாளாந்த வாழ்விலே வெளிப்படும். அவன் தன் ஆத்து மாவை மாயைக்கு விலக்கி காக்கின்றான். அவன் கர்த்தரால் ஆசீர்வாத த்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்.

**சங்கீதம் 128:1**

**கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.**

**ஜெபம்:** என்னை உமக்கென்று வாழ வேறு பிரித்த தேவனே, நான் பயப க்தியோடு உம்மை சேவிக்கின்ற வாழ்க்கையை வாழும்படிக்கு, உமது கற்ப னைகளை மனதார கைகொள்ளும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தரு ள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பூமிக்கு வந்த பரிசுத்தர்

பாவத்திலே வாழும் மனிதர்களின் பாவங்களை பாராட்டும்படியாக ஆண்டவராகிய இயேசு இந்தப் பூமிக்கு வரவில்லை. பாவ சேற்றில் விழுந்திருக்கும் மனிதர்களை கண்டித்து, தண்டிக்கும்படியாக தன்னை தாழ்த்தி இந்த உலகிலே மனிதனாக ரூபம் எடுக்கவில்லை. மாறாக, பாவத்தின் அடிமைத்தனத்திலே அகப்பட்டு, சிக்கிதவிக்கும் மனிதர்களுக்கு, பாவத்தின் பிடியிலிருந்து விடுதலையடையும்வழியை ஏற்படுத்தி, அதை அவர்களுக்கு காட்டும்படியாக இந்தப் பூமிக்கு வந்தார். தேவ பக்தியுள்ளவனென்று சொல்லிக் கொள்ளும் எந்த மனிதனும் இதை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். ஆனாலும், தேவனாகிய கர்த்தர் அறிந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் மனிதர்களும், சில வேளைகளிலே, தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணி விடுகின்றார்கள். இவர்கள் தேவ பக்தியுள்ளவர்களா? இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள் ஒருவன் மக்கள் மத்தியிலே சிறப்பு குடிமகன் என்று கருதப்பட்ட பரிசேயர் என்ற குழவைச் சேர்ந்த வன். மற்றவனோ ஆயக்காரன். அவன் ரோமருக்கு வரிவசூலிப்பவனாக இருந்ததினாலே, சமுதயாததினாலே, துரோகி என்றும், அநியாயக்காரன் என்றும், பறிகாரன் என்றும் கருதப்பட்டான். பரிசேயன் நின்று: நான் இந்த ஆயக்காரனைப்போல பாவியாக இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன் என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தன் கிரியைகளை குறித்து மேன்மை பாராட்டினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அந்தப் பரிசசேயனல்ல, ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறினார். பிரியமானவர்களே, நீங்கள் தேவ பக்தியுள்ளவர்களா? அப்படியானால், உங்கள் கிரியைகளைக் குறித்து மேன்மைபாராட்டாமல், பாவிகளை நியாயந்தீர்க்காமல் அவர்களை இரட்சித்து பரிசுத்தமாக்கும் தேவ கிருபையைக் குறித்து மனதார மேன்மைபாராட்டுங்கள்.

**எபேசியர் 2:8-9**

**கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;**

**ஜெபம்:** என்னை பரிசுத்தமாக்கும் பரிசுத்தரே, தகுதியற்ற என்மேல் உம்முடைய கிருபையை பொழிந்த தேவனே, நான் என் கிரியைகளையல்ல உம்முடைய கிருபையை மேன்படுத்தும்படி, உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாசி யார்?

“தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான் பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன.” (யாக்கோபு 2:19) என்ற வசனத்தை வாசித்த விசுவாசியொருவன் யார் உண்மை யான விசுவாசி என்பதைக் குறித்து தியானித்துக் கொண்டிருந்தான். “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” என்ற சத்தியத்தை பிசாசுகளும் அறிந்திருக்கின்றபடியினாலேயே, சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய உலகத்தாருக்கு பிரகாசமாயிராதபடிக்கு, பிசாசானாவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். ஆண்ட வர் இயேசுவை விசுவாசிக்கின்றவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று அறிந்தபடியினாலே, நம்மிடத்தில் பிரகாசித்த மகிமையின் ஒளியாகிய அந்த சுவிசேஷமானது, நம்மிடத்திலிருந்து மற்றவர்களிடத்திற்கு பிரகாசிக்காதபடிக்கு, இயேசு கிறிஸ்துவை அறிந்த நம்முடைய மனதானது கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி, பிசானானவன், நம்மை வஞ்சிக்க வகை தேடித்திரிகின்றான். அதாவது, கிறிஸ்துவை விசுவாசிக்கின்றேன் என்று கூறும் எவனும், கிறிஸ்துவின் சிந்தையையுடையவனாக, அவரைப் போல வாழ்கின்றான். ஆனால், நான் கிறிஸ்துவை விசுவாசிக்கின்றேன் என்று கூறி, கிறிஸ்துவைப் போல வாழாமல் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷத்தை தரித்து வாழ்வதையே பிசாசானவன் விரும்புகின்றான். கிறிஸ்து நம்மில் இல்லையென்றால், நம்மிடத்தில் இருக்கும் விசுவாசமானது போலியானதாக இருக்கும். கிறிஸ்து நம்மில் ஜீவிக்கின்றவராக இருந்தால், கிறிஸ்துவின் கிரியைகள் நம்மில் அனுதினமும் வெளிப்படும். கிறிஸ்துவின் கிரியைகள் என்ன? அவரிடத்திலிருந்த சிந்தையையென்ன? அவர் தாழ்மையும், கீழ்படிவுள்ளவருமாக, உன்னத்திலிருந்து தாழ்விடங்களுக்கு இறங்கி, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடித்தார். உலகத்திற்கு வெளிச்சமாகவும், பூமிக்கு உப்பாகவும் வந்தார். நாமும்,அவருடைய விசுவாசிகளானால், நாம் பெற்றுக் கொண்ட கிறிஸ்துவின் மகிமையின் ஒளியை இந்த உலக்திற்கு வீசவேண்டும். கிறிஸ்துவின் மனத்தாழ்மையையும், கீழ்படிவையும் தரித்தவர்களாக, இந்த பூமிக்கு உப்பாக வாழ வேண்டும்.

**யோவான் 15:5**

**நானே திராட்சச்செடி, நீங்கள்கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்;**

**ஜெபம்:** என்னில் நற்கிரியைகளை தொடங்கிய தேவனே, முடிவுபரியந்தமும் நான் உம்மைப் பற்றிக் கொண்டி, கிறிஸ்துவின் சாயலிலே அனுதினமும் வளர்ந்து பெருகின்றவனாக இருக்கும்படி கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவின் கிரியைகள்

இயேசு கிறிஸ்து செய்த கிரியைகளை நடப்பிக்க வேண்டும் என்கின்ற வாஞ்சை மனிதர்களுடைய மனதிலே உண்டு. "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்." என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். எனவே, அவரைப் போல, அற்புதங்கள், அடையாளங்களை வெளியரங்கமாக செய்து, மனிதர்களை தொட்டு, நோய்களை குணமாக்கி, அசுத்த ஆவிகளை துரத்தி, மரித்தவர்களை உயிர்ப்பித்து, பெரும் பெரும் காரியங்களை நடப்பிக்கும்படி மனிதர்கள் எண்ணங் கொள்கின்றார்கள். இதுதான் கிறிஸ்துவின் கிரியையா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, அவைகளையும் செய்தார். ஆனால், அவர் வந்த நோக்கம் மேன்மையானது. இந்த உலகத்திலே, மனிதர்கள் நோய்கள் நீங்கி, செல்வத்தை பெருக்கி, பூமியிலே சுபீட்சமாய் வாழும்படி அவர் இந்த பூமிக்கு வரவில்லை. மாறாக, இந்த உலகம் அநித்தியமானதும், அழிவுக்குரியதும் என்பதை உணர்ந்து, நித்திய ஜீவனுக்குரிய மேன்மையானவைகளை தேடும்படி, மனித குலத்திற்கு வழிகாட்டும்படி வந்தார். அவர், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். ஆனால், இன்று கிறிஸ்து செய்த கிரியைகளை செய்கின்றோம் என்று கூறும் சிலர், இந்த உலகத்தின் மேன்மைகளை தங்களுடையதாக்கிக் கொள்கின்றார்கள். கிறிஸ்துவைப் போல, எளிமையான வாழ்க்கை வாழாமல், தங்களுக்கென்று மாளிகைகளையும், மகுடங்களையும் ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். கிறிஸ்துவானவர், இந்த உலகித்திலுள்ள பொருட்களை தமக்கென்று சேர்த்து வைத்தாரா? பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும் இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் என்று ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். எனவே, ஒருவன் கிறிஸ்துவைப் போல வாழாமல் எப்படி கிறிஸ்து செய்த கிரியைகளை செய்ய முடியும்? எனவே, கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்கள் முதலாவதாக, அவரைப் போல வாழ்ந்து, பிதாவானவர் சொல்லும் கிரியைகளை தங்கள் வாழ்வில் நடப்பிக்கின்றார்கள்.

**யோவான் 14:12**

**என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தந்தையே, நான் சுயமாய் எந்தக் கிரியையும் செய்யாமல், பிதவாவின் சித்தப்படி செய்கின்றேன் என்று கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை நான் பின்பற்றி வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காரியத்தை நிதானித்து அறியுங்கள்

**நீதிமொழிகள் 18:13**

**காரியத்தைக் கேட்குமுன் உத்தரம் சொல்லுகிறவனுக்கு, அது புத்தி யீனமும் வெட்கமுமாயிருக்கும்.**

ஒரு கிராமத்திலே வசித்து வந்த விசுவாசியொருவன், தன் வீட்டிற்கு அருகிலே புதிதாக வந்த மனிதனொருவனோடு நட்புடன் பழகி வந் தான். இருவரும் ஒருவருக்கொருவர் நன்மைகளை செய்து வந் தார்கள். அந்த மனிதனானவன் பெரும் கல்விமானாக இருந்தான். ஒரு நாள், அந்த விசுவாசியானவன் தன் குடும்பத்தாரோடு, தெரு விலே சென்று கொண்டிருக் கும் போது, அந்த அயலவன், தன் நண்பர்களோடு பேசிக் கொண்டிருப்பதை கண்டு, சற்று தூரத்தில் நின்று தன் கைகளை அசைத்து, சைகை காட்டினான். ஆனால், அந்த மனித னானவனோ இவனை காணதவன் போல, தன் நண்பர்களோடு தொட ர்ந்து பேசிக் கொண்டிருந்தான். ஒருவேளை நான் சையை காட்டியதை அவன் காணவில்லை என்று நினைத்து, மறுபடியும் கைகளை அசை த்து, சைகை காட்டினான், ஆனாலும் அந்த மனிதனானவனோ இவ னைக் கண்டு கொள்ளாதவன் போல, தொடர்ந்து தன் நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தான். இதனால், அந்த மனிதனானவன், அந்த அயலவன் தெருவிலே தன்னை வெட்கப்படுத்தி விட்டான் என்று மிகவும் கோபமடைந்து, அவன் அருகே சென்று “உன் கல்வியை குறித்து உன க்குள் பெருமை இருக்கின்றது என்று எனக்கும் தெரியும், உன் கல்வி கற்ற நண்பர்கள் முன்னிலையில் எனக்கு சைகையை காட்டுவது உன க்கு வெட்கமாக இருக்கின்றதா” என்று கூறினான். அதை கேட்டு அதிர் ச்சியடைந்த அந்த மனிதனானவன் நீ எதைக் குறித்து பேசுகி ன்றாய். சற்று நிதானமாக பேசுவோம் என்று கூறினான். ஆனாலும், அந்த விசுவாசியானவனோ காரியத்தை கேட்க மனதில்லாமல், தன் செவி களை அடைத்துக் கொண்டு, அவனை மிகவும் கண்டித்து பேசினான். சற்று நேரத்திற்கு பின், அந்த அயலவன், அந்த மனிதனை நோக்கி: நண்பனே, என் முகத்தைப் பார். நான் என் கண்ணாடியை வீட்டேவிட்டு வந்து விட்டேன், சற்று தூரத்தில் என்ன நடக்கின்றது என்று எனக்கு பார்க்க முடியாது. நீ சைகை காட்டியதை நான் காணவில்லை. என்னை மன்னிக்க வேண்டும் என்று சாந்தத்தோடு பதிலளித்தான். பிரியமான வர்களே, நாம் யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்க வேண் டும். மனிதனுடைய கோபம் சுயநீதியையே நிறைவேற்றும். நம் வாழ்க் கையிலே காரியங்களை நிதானித்து அறியும்படிக்கு, நீடிய பொறுமை யின் கனியானது நம் வாழ்வில் பெருக வேண்டும்.

**ஜெபம்:** நீதியின் தேவனே, என்னுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாது என்பதை எப்போதும் உணர்ந்தவனாய், நீடியபொறு மையோடு நிதானமாய் நடந்து கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# குறை யாரிடத்தில் உண்டு

தன் வீட்டிற்கு அருகில் புதிதாக குடியேறிய மனிதனானவனோடு நட்பாக பழகி வந்த விசுவாசியானவன், அந்த மனிதனானவன் பெரும் கல்விமானாக இருந்ததினால், அவனுக்குள் கல்வியின் பெருமை இருக்கின்றது என்ற எண்ணம் இந்த விசுவாசியானவனின் உள்ளத்திலே இருந்தது என்பதை குறித்து நேற்றைய தியானத்தில் பார்த்தோம். அந்த மனிதனானவனிடம் கல்வியைக்குறித்த பெருமை இருக்கின்றதென்பதைவிட, இந்த விசுவாசியானவனின் உள்ளத்தில் தான் தான் அவனைப் போல கல்வி கற்கவில்லை என்ற தாழ்வு மனப்பான்மை இருக்கின்றது என்பதே மிகவும்பொருத்தமாக இருக்கும். அது மட்டுமல்ல, சீக்கிரமாக மற்றவனை நியாயந்தீர்ப்பதும், காரியங்களை நிதானித்து அறியும்படிக்கு தேவையான நீடிய பொறுமையும் இந்த விசுவாசியானவனின் மனதில் இல்லாதிருந்தது. ஒருவேளை நாம் அறிந்தவர்கள் தங்கள் கல்வி, செல்வம், சமூக அந்தஸ்துகளை குறித்து பெருமை பாராட்டிக் கொண்டிருக்கலாம். அவை யாவும் அழிந்து போகும் காரியங்கள் என்று நாம் உண்மையாக உள்ளத்தில் ஏற்றுக் கொள்வோமாக இருந்தால், அவைகளை குறித்து நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. மற்றவர்களுடைய வாழ்க்கையிலுள்ள மாம்சத்தின் இச்சைகளை குறித்து மனிதர்களின் குறைகளை குறித்து சம்பாசிக்கவும், அவர்களை நியாந் தீர்க்கவும் முந்திக் கொள்கின்றார்கள். இவர்கள் மற்றவர்களின் குறைகளை பேசுவதினால் தங்கள் மாம்சத்தின் இச்சையை நிறைவேற்றுகின்றார்கள். அது மட்டுமல்லாமல், தாங்கள் நீதிமான்கள் என்னும் பெருமை இவர்கள் உள்ளத்திலே குடிகொண்டிருக்கின்றது. பிரியமானவர்களே, மற்றவர்களின் வாழ்க்கையிலே இருக்கும் குறைகளை நாம் சுட்டிக் காட்டுவதால், நாம் நீதிமான்களாக மாறிவிடுவதில்லை. நாம் மற்றவர்களை குறித்தே விமர்சித்துக் கொண்டிருப்போமானால், தேவன் முன்னிலையிலே நாம் நாவடகமற்றவர்களாக காணப்படுவோம். ஒரே நாவினாலே "நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது." என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது.

**யாக்கோபு 1:26**

**உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்**

**ஜெபம்**: உம்மை துதிக்கும் புதிய பாடலை என் நாவில் தந்த தேவனே, என் நாவினால் நான் புறங்கூறாமல், வாழ்வு தரும் நன்மையான வார்த்தைகளை பேச சுத்தமுள்ள இருதயத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவின் நற்கந்தம்

அனுதினமும் கிறிஸ்துவோடு வாழும் பரிசுத்த வாழ்வு வாழும்படிக்காக நாம் வேறுபிரிக்கப்பட்டிருக்கின்றோம். நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டோம். எனவே நாம், நம்முடைய இருதயத்தை எல் லாக் காவலோடும் காத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அங்கிருந்து பரிசுத்தமான ஜீவ ஊற்று புறப் படுகின்றது. கிறிஸ்துவை தரித்த வாழ்வு சாக்கடை போன்ற வாழ்வு அல்லவே. ஒரு பட்டணத்தில் இரு ந்த நீண்ட சாக்கடையிலே, அந்த ஊரிலுள்ள கழிவு நீரோடு வரும் அழுக்குகள் அதிகமாக தேங்கி தங் கியிருந்ததால், துர்நாற்றம் எடுத்தது. அவ்வழியாய் கடந்து போகின்ற வர்கள், அந்த நாற்றத்தை சகிக்கக் கூடாமல், தங்கள் கைகளால் மூக்கை அடைத்துக் கொண்டு சென்று வந்தார்கள். அங்கு வாழும் மக் கள், அதைக் குறித்து பட்டணத்தின் நகர சபையிலே முறையீடு செய் தார்கள். இன்று கிறிஸ்துவை அறிய வேண்டிய பிரகாரமாக அறியாத வர்கள், தங்கள் இருதயத்தை ஊரின் அழுக்குகள் சென்றடையும் சாக் கடையைப் போலாக்கும்படி, அழுக்கள் அங்கே தேங்கி நிற்க இடங் கொடுக்கின்றார்கள். இருதயம் எதினால் நிறைந்திருக்கின்றதோ, அதுவே வாயினாலே பேசப்படும். சாக்கடையிலிருந்து துர்நாற்றம் மட்டுமேபுற ப்படும். நம்முடைய அழைப்பு அத்தகையதல்லவே. நாம் தேவனுக்கு சுகந்த வாசனையான துதியை ஏறெடு க்கும், பரிசுத்த சந்ததியா கவும், இராஜரீக ஆசாரிய கூட்டமாகயும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றோம். எனவே, மற்றவர்களின் குறைகள் நிறைந்திருக்கும் இடமாக உங்கள் இருதய த்தை மாற்றிப் போடாதிருங்கள். எனவே, பரிசுத்தமானவைகளை நம் இருதயத்திலே சேர்த்து வைப்போமாக. பிரியமானவர்களே, துர்மனச் சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத் தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத் தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.

**1 தெச 5:23**

உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்மு டைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற் றமற்றதாயிருக்கும்படி காக் கப்படுவதாக.

**ஜெபம்:** கிறிஸ்துவின் நற்கந்தமாக நம்மை ஏற்படுத்திய தேவனே, குறை களினாலும், அசுத்தங்களினாலும், என் இருதயத்தை நான் நிறைத்துக் கொள்ளாமல், கிறிஸ்வின் நறுமணம் வீசுகின்றவனாக வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஒருவரோடொருவருக்குள்ள ஐக்கியம்

பல ஆண்டுகாலமாக குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் மின்சார வசதிகள் இல்லாதிருந்ததால்,இரவு நேரங்களிலே அந்த கிராமத்தின் தெரு வழியாக செல்வது கடினமாக இருந்து வந்தது. அதனால், அந்த கிராம த்தின் முதல்வர், அரச அதிகாரிகளிடத்தில் விண்ணப்பித்திருந்தார். அதன் பலனாக, அந்த தெருவிலே மின்கம்பங்களான இரு கரையிலும் நேர்த்தியாக நடப்பட்டு, அதிலே ஒளி வீசும் மின்குமிழ்களை பொருத்தினார்கள். யாவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. வேலைகள் யாவும் பூர்த்தியான பின்பு, முன்குறித்த இரவிலே, மின் குமிழ்களை முதன் முறையாக ஒளிவீச பண்ணும் விழாவிற்கு சில அதிகாரிகளும், ஊர் மக்கள் யாவரும் வருகை தந்திருந்தார்கள். கிராம மக்களின் கரகோசத்தோடு, கிராமத்தின் முதல்வர், அந்த மின்சார குமிழ்களை ஏற்றும் படிக்கு, மின்விசை நிலைமாற்றியை (Electric switch)அமுக்கிய போது, மின்குமிழ்கள் ஒளிவீசவில்லை. உடனடியான அங்கிருந்த மின்சார தொழில் நுட்பப் பணியாளர் (Electrician), மின்சார தொடர்புகளை பரிசோதித்து பார்த்த போது, மின்கம்பியானது (Wire) பிரதான மின்சார தொகுதியோடு சரியான முறையில் இணைக்கப்படாதிருப்பதை கண்டு, அந்த இணைப்பை சரியாக பொருத்தினார். அப்போது, அந்த தெரு முழுவதும் ஒளி பிரகாசித்தது. மக்கள் யாவரும் சந்தோஷத்தினால் ஆர்பரித்தார்கள். ஆம் பிரியமானவர்களே, மின் கம்பங்களும், மின்குமிழ்களும் நேர்த்தியாக பொருத்தப்பட்டிருந்த அந்த அலங்காரமானது, பகல் வேளையிலே மிக அழகாக காட்சியளித்தது. ஆனால் இருள் சூழ்ந்த போது, மின்குமிழ்களை ஏற்ற முடியவில்லை. அவை யாவும் அழகாக காட்சியளித்ததினால் பலன் என்ன? அதுபோலவே, நம்முடைய ஐக்கியமும், அழகாகவும், நேர்த்தியாகவும், ஜனத்திரள் நிறைந்ததாகவும் காணப்படலாம், ஆனால் அந்த ஐக்கியமானது பிராதான ஆசாரியராகிய இயேசுவோடு இணைக்கப்படாதிருந்தால், விசுவாசிகள் மத்தியிலே தெய்வீக ஐக்கியம் உண்டாயிருக்காது. இருளில் பிரகாசிப்பிக்கின்ற மகிமையின் ஒளி அங்கே இருக்காது. எனவே, பிதாவாகிய தேவனோடும், அவருடைய குமாரனாகிய இயேசுவோடும் ஐக்கியமாயிருங்கள். கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் கிறிஸ்தனாக வாழ முடியாது. கிறிஸ்துவின் ஆவியைத் தரித்தவர்களாக அவருடைய ஒளியிலே நாம் நடந்து, அந்த திவ்விய ஒளியினாலே ஒருவரோடொருவர் ஐக்கியமுள்ளவர்களாக இருப்போமாக.

**1 யோவான் 1:7**

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்

**ஜெபம்**: உன்னதமான தேவனே, இந்த உலக போக்கிலுள்ள ஐக்கியத்திலே திருப்தியடைய முயலாமல், உம்மோடுள்ள ஐக்கியத்திலே நாம் எப்போதும் உறுதியாக நிலைத்திருக்கும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்து உங்களில் வாசமாயிருக்கின்றார்

அக்காலத்திலிருந்த மதத் தலைவர்கள், சிறப்பு வர்க்கங்களை சேர்ந்த மனிதர்கள் இயேசு கிறிஸ்துவை முழு மனதோடு எதிர்த்து நின்றார்கள். இவர் ஏழை எளியவர்களையும், பாவத்தில் விழுந்து விடுதலையடைய வழிதெரியாமல் தவிக்கும் பாவிகளையும், சமுதாயத்தினால் கைவிடப் பட்டு, தள்ளப்பட்வர்களையும், திக்கற்ற பிள்ளைகளையும் தேடிச் செல்கின்றார் என்று அறிந்த போது, அதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தது போல, "தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர் களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிர சித்தப்படுத்தவும்" இந்த உலகத்திற்கு வந்தார். பெருமையுள்ளவர்களு க்கோ இந்த வாக்கியங்களை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால், இதுவே கிறிஸ்துவில் இருந்த சிந்தையென்று நாம் அதை மேன்மை பாராட்டுகின்றோம். நாம் அப்படியாக மேன்மை பாராட்டினால், கிறிஸ்து விலிருந்த ஆவியை பெற்ற நாம் எப்படிப்பட்ட காரியங்களை செய்ய வேண்டும். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கற்பித்து கொடுத்த காரியங்களை நாம் செய்ய வேண்டும். உயர்ந்தவன், தாழ்ந்த வன், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடில்லாமல், மனத்தாழ்மையோடு, இரட்சிப்பின் அவசியத்தை உணர்ந்து, தம்மிடம் வந்த ஒருவரையும் ஆண்வடர் இயேசு தள்ளிவிடவில்லை. ஆனால், பெருமையுள்ளவர்களாக இருந்து, சிறுமைப்பட்டவர்களை ஒடுக்கின்றவர்களுக்கு அவர் எதிர்த்து நின்றார். ஆனால், இன்று, ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்டோம் என்று கூறுகின்ற சிலர், ஏழை எளிவயர்களை, சிறுமைப்பட்டவர்களை ஏற்றுக் கொள்வதில்லை. அப்படிப்பட்டவர்கள் திக்கற்றவர்களுக்கு உத விகளை செய்தால், தங்களுடைய பெயருக்கும் புகழுக்குமாகவே செய் கின்றார்கள். இவர்கள் கிறிஸ்துவை அறிய வேண்டிய பிரகாரமாக இன் னும் அறியாதவர்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்களோ, கிறிஸ்துவுடையவர்கள். விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருத யங்களில் வாசமாயிருக்கின்றார். எனவே, ஆண்டவர் இயேசு கிறி ஸ்து எப்படியாக தம்முடைய திருப்பணியை நிறைவேற்றி னாரோ, நாமும் அப்படியாகவே இருக்க வேண்டும். ஒருபோதும் இருதயத்தில் மேட்டி மையான எண்ணங்களுக்கு இடங்கொடாமல் தாழ்மையுள்ள இருதய த்தோடு தேவ பணியை நிறைவேற்றுங்கள்.

**லூக்கா 4:18**

**கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்;**

**ஜெபம்**: தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அருளும் தேவனே, தாழ் மையின் மேன்மையை கற்றுக் கொடுத்த, உம்முடைய திருக் குமார னாகிய இயேசுவைப் போல நானும் மனத்தாழ்மையோடு பணி செய்ய கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனரம்மியமான வாழ்க்கை

ஒரு ஊரிலே வசதியாக வாழ்ந்து வந்த மனிதனொருவன், என்னை இன்னும் மேலதிகமாக ஆண்டவர் ஆசீர்வதித்தால் நான் வறியோருக்கு தானதர்மங்களை செய்வேன் என்று கூறிக் கொண்டான். அவன் வாழ்ந்த தெருவிற்கு அப்புறமாக ஒரு எளிமையான வீட்டிலே, வாழ்ந்து வந்த பாட்டியானவள், அன்றன்றாட உழைப்பிலே வாழ்ந்து வந்த போதிலும், தன்னைவிட வறுமையான நிலைமையில் வாழும் எந்த மனிதர்களை கண்டாலும், மனதுருகி, தன்னிடத்திலுள்ள கொஞ்சத்திலிருந்து, அவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க எப்போதும் ஆயத்தமுள்ளவர்களாக இருந்தாள். அதனால் அவள் ஒரு போதும் குறைவுபட்டுப் போனதில்லை.மேலதிகமாக இருந்தால் செய்வேன் என்று சொல்கின்றவன் சுயநலமுடையவனாக வாழ்கின்றவன், அவன் மனம் ஒருபோதும் திருப்தியடையாததினால், அவனிடலிருப்பது ஒருபோதும் அவனுக்கு போதாதது போலவே இருக்கும். அந்த எளிமையான வாழ்க்கை வாழும் பாட்டியானவள், எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்யமாக வாழ கற்றுக் கொண்டதால், அவள் மனம் எப்போதும் திருப்தியாகவே இருந்தது. அவள் தன் குறைவிலே நிறைவாய் வாழக் கற்றுக் கொண்டாள். பரலோகத்திலே தனக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைப்பதின் மேன்மையை அறிந்தவளாக வாழ்ந்து வந்தாள். பிரியமானவர்களே, நம்முடைய பரம பிதா இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராக இருப்பது போல, நாமும் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்களாக மாற வேண்டும். சிலர் இந்த உலக ஐசுவரியம் நிறைந்தவர்களாக இருந்து, அழிந்து போகும் ஐசுவரியத்தில் நம்பிக்கை வைத்து, ஐசுவரியம் தங்கள் சந்ததியை காக்கும் என்ற எண்ணத்துடன் பல தலைமுறைகளுக்கு பொக்கிஷங்களை இந்த உலகிலே சேர்த்து வைக்கின்றார்கள். ஆனால், இரக்கத்திலோ அவர்கள் ஏழைகளாகவே மரிக்கின்றார்கள். இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்கள், அவர்களிடம் திரளான ஐசுவரியம் இல்லாதிருந்தாலும், கர்த்தரை நம்பி நன்மை செய்கின்றார்கள். அவர்கள் அதிகமாக இந்த உலகத்திலே சேர்த்து வைப்பதில்லை. கர்த்தரை தங்களுடைய சந்ததியின் சகாயராக வைத்துப் போகின்றார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள் அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது. *(சங்கீதம் 34:9-10)*

**சங்கீதம் 23:1**

**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.**

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள பிதாவே, எல்லா சூழ்நிலைகளிலும் மனரம்யமாய் இருக்கவும், உம்மைப் போல இரக்கத்தில் ஐசுவரிமுள்ளவனாக மாறவும் எனக்கு கற்றுத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# புதிதும் ஜீவனுமான வாழ்க்கை

**எபிரெயர் 10:19**

**புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்,**

ஒரு தகப்பனானவர், தன் இளைமைக் காலத்தில் தான் செய்த வீர சாகச செயல்களைக் குறித்து அவ்வப்போது தன் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொள்வது வழக்கமாக இருந்து வந்தது. ஒரு நாள், தகப் பனானவர் அப்படியாக தன் இளமைக் காலத்தைக் குறித்து பேசிக் கொண்டிருக்கும் போது, அவருடைய சின்ன மகளானவள், அவரை நோக்கி: "அப்பா, அந்த செயல்களை இப்போது எங்களுக்கு செய்து காட்டுங்களேன்" என்று கேட் டுக் கொண்டாள். அதற்கு தக ப்பனானவர், அது அந்தக் காலம் மகளே. இளமைக் கால த்தின் பெலன் எனக்கு இப் போது இல்லை. காலம் கடந்து போய்விட்டது என்று கூறிக் கொண்டார். இந்த சம்பவத்தை மையமாக வைத்து, இயேசுவோடு வாழும் வாழ்க் கையை குறித்து இன்று தியானம் செய்வோம். நம்முடைய வாழ்க்கை யின் பல செயற்பாடுகள், வயதோடு மாறிக்கொண்டு போவது உண்மை. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு வானத்தின் கீழிருக்கிற ஒவ் வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு என்பதை குறித்து எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. மனிதர்களுடைய சரீரம் வயதோடு பெல வீனமடைந்து கொண்டு செல்கின்றது. ஆனால், இயேசுவோடு வாழும் வாழ்க்கைக்கு ஒரு கால எல்லையை நாம் குறித்துவிடக் கூடாது. அவ ரோடு வாழும் வாழ்க்கையானது கடந்த காலத்திற்கு அல்லது இறந்த காலத்திற்ரியதல்ல. அந்த வாழ்க்கை பழைமையடைந்து போவதில்லை. அது நாளுக்கு நாள் புதிப்பிக்கப்படுகின்ற வாழ்க்கை. நான் அன்று இயேசுவுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்தேன், இன்று வயதாகி விட்டது எனவே அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ முடியவில்லை என்ற எண்ணம்கூட மனதிலே தோன்றுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. "கர்த்தர் நன்மையினால் உன் வாயைத் திருப்தியா க்குகிறார். கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது." எனவே நீங்கள் எந்த வயதையுடையவர்களாக இருந்தாலும், மாம் சமான பழைய மனுஷனுக்குரிய சுபாவ இச்சைகளை களைந்துவிட்டு, உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் இன்னும் அதிகமாக பெல னடைய வேண்டும். சில வேளைகளிலே, வாழ்க்கையிலே ஏற்படும் சூழ் நிலைகள் சில மனச்சோர்வுகளை உண்டு பண்ணலாம். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுக ளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடி னாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

**ஜெபம்**: சோர்ந்துபோகிறவனுக்கு பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவ னுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகின்ற தேவனே, நான் எக்கால த்திலும் உறுதியாய் உம்மில் தரித்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | டிசம்பர் 12

📖 மாலை வாசகம் – எரேமியா 17:7–8

# நிலையற்ற உலகில் நிலையான நம்பிக்கை

அநேக ஆண்டுகளாக ஒரு கம்பனியிலே வேலை பார்த்து வந்த தாயானவள், தன் கணவனை இளம் வயதிலே இழந்து போனாதால், தன்னுடைய பிள்ளைகளை தனியாக வளர்ந்து வந்தாள். ஆண்டுகள் கடந்து சென்ற போது, அவள் வேலை பார்த்து வந்த கம்பனியிலுள்ள இயக்குனர், அந்த தாயாளவளைவிட இன்னும் துரிதமாக வேலை பார்க்கும் இளவயதுள்ளவர்களை வேலைக்கு அமர்த்தும்படிக்கு, அந்த தாயானவளை தொந்தரவு செய்ய ஆரம்பித்தான். அதை அங்கிருந்து அநேக சக ஊழியர்கள் கண்டபோதும், இயக்குனருக்கு பயந்திருந்ததால், காணாதவர்களைப் போல இருந்து விட்டார்கள். சில மாதங்களுக்கு பின்னர், அந்த தாயானவள், கண்ணீராடு அந்த கம்பனியைவிட்டு விலகிச் சென்றுவிட்டாள். சில நாடுகளிலே இப்படிப்பட்ட சம்பவங்களை தவிர்க்கும்படியாக சட்டங்கள் அமுலில் இருக்கின்ற போதிலும், பொதுவாக இன்றைய உலகிலே மனிதர்களுடைய மனநிலை அந்த இயக்குனருடைய மனநிலையைப் போலவே இருக்கின்றது. மற்றவனுடைய வாழ்க்கையை குறித்த கரிசனையேதுமில்லாமல், தங்களுக்கு அதிக இலாபமானவைகள் எவைகளோ, அவைகளையே நாடித் தேடுகின்றார்கள். ஆனால், படைத்த தேவன் தன்னுடையவர்களை மறந்து போவாரோ? ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது என்று தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனங்களைக் குறித்து கூறியிருக்கின்றார். நம்முடைய தேவனாகிய கர்த்தர் தன்னிடத்தில் வரும் எவரையும் பலனற்றவர்கள் என்று தள்ளிவிடுவதில்லை. மாறாக, அவர்கள் எப்படிப்பட்ட நிலைமையில் இருந்தாலும், அவர்களை ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு புதிய வாழ்வை கொடுத்து, அவர்கள் தம்மில் நிலைத்திருந்து இன்னும் அதிக கனிகளை கொடுக்கும்படி அவர்களை வழிநடத்திச் செல்கின்றார். பிரியமானவர்களே, கர்த்தரையே நோக்கி அமர்ந்திருங்கள். அவரே நம் கன்மலையும், நம் இரட்சிப்பும், நம் உயர்ந்த அடைக்கலமுமானவர். அவரை நம்பினோர் என்றென்றைக்கும் கைவிடப்படுவதில்லை.

**சங்கீதம் 62:8**

**ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்.**

**ஜெபம்**: நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவனாகிய கர்த்தாவே, நிலையற்ற இந்த உலகின் போக்கிலே நான் வாழாமல் உம்மையே நம்பிக்கையாக கொண்டு வாழும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன்| டிசம்பர் 13

📖 மாலை வாசகம் – ஏசாயா 49:15–16

# காருண்யமான கர்த்தர்

ஒரு சமயம் ஆண்டவர் இயேசு காணிக்கைப்பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப்பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார் ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள். ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப்பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப்போட்டார்கள் இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார். இந்த சம்பவத்தைக் குறித்து பேசும் போது, பொதுவாக காணிக்கை தசம பாகத்தை பற்றி சிந்தித்துக் கொள்கின்றார்கள். ஆனால், அன்றைய நாளிலே, அந்த இடத்திலே, இயேசுவின் சீஷர்கள் அவரருகே இருந்தார்கள். அத்தோடு மதத் தலைவர்களும், வேறு ஜனங்களும் அங்கே இருந்திருக்கலாம். பலரும் பல விதமாக அந்த சம்பவத்தை அவதானித்திருந்திருக்கலாம். ஆனால் அந்த ஏழை விதவையானவள் தன்னிடம் இருந்ததெல்லாவற்றையும் கொடுத்து விட்டாள் என்று இயேசுவானவருக்கு எப்படித் தெரியும்? ஏனெனில், அவர் ஆண்டவர்! அவர் மனிதர்களுடைய வாழ்க்கையையும், அவர்களுடைய மனநிலையையும் அறிந்திருக்கின்றார். ஏழை, விதவை, திக்கற்றவர்கள் என்று எவரையும் அவர் தள்ளிவிடுபவரல்லர். ஒரு வேளை, இன்று அதிகம் கொடுக்கின்றவர்களை மனிதர்கள் அதிகமாக கனப்படுத்திக் கொள்கின்றார்கள். ஆனால், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவோ, இருதயங்களை ஆராய்ந்தறிக்கின்றார். கருப்பொருளாவது, ஆண்டவர் இயேசு நம்முடைய வாழ்வின் நிலைமையை நன்றாக அறிந்திருக்கின்றார். மனிதர்கள் பார்க்கும் பிரகாரமாக அவர் பார்கின்றவர் அல்லர். அவராலே ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு நாம் ஐசுவரியவான்களாகவும், சமுக அந்தஸ்துள்ளவர்களாகவும், கல்விமான்களாகவும் இருக்கத் தேவையில்லை. நாம் யாராக இருந்தாலும், எந்த நிலைமையில் இருந்தாலும், எந்த வயதுடையவர்களாக இருந்தாலும், மனத்தாழ்மையோடு அவரை நாடித் தேடுகின்ற ஒருவரையும் அவர் புறம்பே தள்ளிவிடுகின்றவர் அல்லர். எனவே, எந்த சூழ்நிலையிலும் அவரை பற்றிக் கொண்டிருங்கள்.

**உபாகமம் 31:6**

**அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை**

**ஜெபம்**: இருதயங்களை ஆராய்ந்தறிக்கின்ற தேவனே, நான் ஒருபோதும் பெருமையான உள்ளம் கொண்டிராமல், மனத்தாழ்மையோடு உம்மை பற்றிக் கொண்டிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வியாழன் | டிசம்பர் 14 | 🕮 மாலை வாசகம் – சங்கீதம் 71:17–18

# பெலனற்ற நாட்கள்

குறிப்பிட்ட ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனானவன், பல சூழ்நிலைகள் காரணமாக, அந்த ஊரின், வாழ்க்கை நிலையானது நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டிந்ததால், வேறொரு தேசத்திற்கு சென்று, அந்த தேசத்தின் குடியுரிமையை பெற்று, தன் இளமைக் காலங்களிலே கருத்தோடு உழைத்து, சட்டப்படி தேசத்தின் வரிகளையும் நிலுவைகளையும் செலுத்தி வந்தான். அவன் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற நாளிலிருந்து, அந்த தேசமானது, அவனுக்கு ஓய்வூதியத்தை வழங்கி, அவனுடைய மருத்துவ தேவைகள் யாவையும் சந்தித்து வந்தது. அவனுடைய தேவைகளை மட்டுமல்ல, தங்கள் உடற்பெலவீனங்களால் உழைக்க முடியாதவர்கள், திக்கற்றிருக்கும் குடிமக்களையும் அவர்களுடைய வயோதிப நாட்களில் பராமரித்து வந்தது. இந்த நிலையற்ற இந்த உலகத்திலும், தேசங்களிலே நன்மைகள் நடப்பதை காண்கின்றோம். கோணலும் மாறுபாடுமான இந்த நிலையற்ற உலகத்திலிருந்து மீட்கப்பட்டு, நிலை யான பரம தேசத்தின் குடிமக்களாகும்படி தெரிந்து கொள்ளபட்ட நம்மை, பரம தேசத்தின் பிதாவானர் நம்முடைய பெலன் குறைந்து போகும் நாளில் நம்மை கைவிடுவாரோ? அவர் ஒருபோதும் கைவி டமாட்டார். காலங்கள் கடந்து செல்லும் போது, சரீரத்தின் பெலனானது குன்றிப் போகின்றது. முன்பு போல, சுதந்திரமாக நினைத்த நேரத்தில் நினைத்த இடத்திற்கு செல்ல முடியாதபடிக்கு, மற்றவர்களில் தங்கி வாழும் நிலைமை ஏற்படுகின்றது. சில வேளைகளிலே நம்பியி ருந்தவர்களும் கைவிட்டு போய்விடுகின்றார்கள். சிலர் வைத்தியசாலை களிலும், பராமரிப்பு நிலையங்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள். வறுமையல்ல, தனிமையே மிகபெரிய கொடுமை என்று உணர்ந்து கொள்கின்றார்கள். ஆனால், நாம் வீட்டிலிருந்தாலும், காவலில் இருந் தாலும், நம்முடைய ஆண்டவராகிய இயேசு நம்மை மறந்து போகமாட்டார். முதிர்ந்தவயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும் என்று தேவ பக்தன் தன் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிட்டான். அவன் அவரை கூப்பிடுவதற்கு முன்னதாகவே அவனுடைய நாட்களை அவர் அறிந்திருக்கின்றார். தம்முடையவர்களை அவர் தம் உள்ளங்கையில் வரைத்திருக்கின்றார். அவர் அறியாமல் அவருடையவர்களுக்கு ஒன்றும் நேரிடுவதில்லை. எனவே, திடன் கொள்ளுங்கள். ஆண்டவர் இயேசு உங்களோடு இருக்கின்றார்.

**சங்கீதம் 71:9**

**முதிர்ந்தவயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும்.**

**ஜெபம்:** என் பலத்த அடைக்கலமாயிருக்கின்ற தேவனே, எக்காலத்திலும் என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருக்கும்படி என்னை நீர் வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | டிசம்பர் 15

📖 மாலை வாசகம் – யாக்கோபு 1:27

# சிறுமையும் எளிமையுமானவர்கள்

ஒரு தேசத்தை நீதியும் நியாயமுமாக ஆண்டு வந்த ராஜாவானர், தேசத்தின் குடிகளின் சேமநலனை விசாரிக்கும்படி, பட்டணங்கள், கிராமங்கள்தோறும் அதிகரிகளை ஏற்படுத்தி, அந்த அதிகாரிகள் செய்ய வேண்டிய நீதியும் நியாயமுமான காரியங்களை திட்டமாக அவர் களுக்கு கட்டளையிட்டிருந்தார். குறிப்பிட்ட கிராமத்தை விசாரித்து வந்த அதிகாரி, முகதாட்சண்யம் பாரா ட்டி, எளிமையும் சிறுமையுமான மக்களை விசாரிக்காமல், தனக்கு வேண்டியவர்களுடைய காரியங் களை மட்டும் விசாரித்து வந்தான். இதனால், அந்த கிராமத்திலுள்ள பலர் மிகவும் கஷ்டத்திற்குள்ளா னார்கள். சில வருடங்கள் சென்ற பின், இந்த செய்தியானது ராஜா வானவருடைய காதுகளிலே எட் டியது. அவர் தீவிராமாக அந்த கிராமத்திற்கு சென்று அங்கு நடக்கும் காரியங்களை விசாரிக்கும்படி தன்னுடைய மந்திரிக்கு அனுப்பினான். நடந்த சம்பவங்களை உறுதி செய்த ராஜா, மிகவும் கோபமடைந்தவராய், அந்த அநீதியான அதி காரியை சிறையிலே அடைக்கும்படி கட்டளையிட்டு, அந்த கிராமத்தி லுள்ள எளிமையும் சிறுமையுமானவர்களின் தேவைகளை பூர்த்தி செய்தார். பிரியமானவர்களே, இந்த உலகத்திலே, நாம் வேலை செய் யும் இடங்களிலே, தங்கியிருக்கும் இடங்களிலே, உறவுகள் மத்தியிலே அநீதியான செயல்கள் நடைபெறலாம். நம்முடைய தேவனாகிய கர்த்தர் எல்லாவற்றையும் அறிந்திருக்கின்றார். எனவே, உங்கள் தேவைகளை மட்டுமல்ல, உங்கள் குற்றங் குறைகளையும் உண்மையான மனதோடு அவருக்கு தெரியப்படுத்துங்கள். தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிரு க்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார். தேவன் தனிமையானவர்க ளுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார் துரோகிகளோ வறண்ட பூமியில் தங்குவார்கள். பிரியமானவர்களே, நீங்கள் உங்கள் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்த மான பக்கதியுள்ளவர்களாக வாழ விரும்பினால், உங்கள் வாழ்க் கையை இந்த உலகத்தினால் கறைப்படுத்திக் கொள்ளாமல், தேவ நீதியை நிறைவேற்றி, உங்கள் பரம தந்தையைப் போல திக்கற்ற பிள்ளைகளும் விதவை களும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரியுங்கள்.

**சங்கீதம் 68:5**

**தம்முடைய பரிசுத்த வாச ஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவரு மாயிருக்கிறார்.**

**ஜெபம்:** உம்முடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கின்ற பிதா வாகிய தேவனே, நானும் உம்மைப் போல மனதுடையவனாக வாழும் படிக்கு, மனதுருக்கமுள்ள இருதயத்தை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# என்னை பலப்படுத்தி சகாயம்பண்ணும் தேவன்

என் வீட்டின் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு, நான் என்னால் முடிந்த யாவையும் செய்துவிட்டேன். நான் செய்யக்கூடியது என்று இனி ஒன்றுமில்லை. என் பெலன் அவ்வளவுதான் என்று ஒரு விசுவாசியான வன் கூறிக் கொண்டான். இப்படியான சூழ்நிலைகள் அந்த விசுவாசி யானவனின் வீட்டில் மாத்திரமல்ல, எல்லோருடைய வாழ்க்கையிலும் உண்டாகுவதுண்டு. குடும்பத்திலே, வேலையிலே, பிள்ளைகள் படிக் கும் பள்ளிக்கூடத்திலே, ஊழியத் தின் பாதையிலே, உறவுகள் மற் றும் நண்பர்கள் மத்தியிலே உண் டாகும் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு அல்லது ஒரு காரியத்தை செய்து முடிப்பதற்கு நாம் பல முயற்சிகளை எடுக்கின்றோம். முயற்சி கள் எடுப்ப நல்லது, ஆனால், சில வேளைகளிலே சூழ்நிலைகள் நம் முடைய பெலத்திற்கு மிஞ்சி சென்று விடுகின்றது. அந்த வேளையிலே, சிலர் அந்த விசுவாசியானவனை போல தங்கள் இயலாத நிலைமையை ஏற்றுக் கொள்ளுவதில்லை. மாறாக, “நான்” என்கிற பெருமையை விட் டுவிடுவதில்லை. “நான் செய்வேன், என்னால் கூடும், எனக்கு எல்லாம் தெரியும்” என்னும் சுயபெலத்தினால் நாம் இந்த உலகத்தை ஜெயிக்க முடியாது. அதனால்தான், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து நாம் வெற்றியுள்ள வாழ்க்கை வாழும் வழி யை காண்பித்தார். அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று கூறினார். இந்த உலகத்திலே நாம் தனித்துவிடப்படும் சூழ்நிலைகள் உண்டாகலாம். அதாவது, சில தீர் மானங்களை அவரவர் தங்கள் இருயத்திலே உறுதியாக எடுக்க வேண் டும். ஆனாலும் நாம் தனித்து விடப்படுவதில்லை என்பதை நாம் திட்ட மாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசு தனியாக கல்வாரி மலையிலே செய்து முடிக்க வேண்டிய காரியம் இருந்தது. அவர் தம்முடைய சீஷரை நோக்கி: இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவி டுங்காலம் வரும் அது இப்பொழுது வந்திருக்கிறது. ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார் என்றார். ஆம், பிரி யமானவர்களே, சோர்ந்து போகாதிருங்கள். என்னை பெலப்படுத்து கின்ற கிறிஸ்துவினாலே நான் எல்லாவற்றையும் செய்து முடிப்பேன் என்ற நம்பிக்கையோடு முன்னேறுங்கள்.

**ஏசாயா 41:10**

**நீ பயப்படாதே, நான் உன் னுடனே இருக்கிறேன்; திகை யாதே, நான் உன் தேவன்;**

**ஜெபம்:** நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்று உரை த்த தேவனே, நான் செய்ய வேண்டிய காரியங்களை, உம் சித்தப்படி செம் மையாக செய்து முடிக்க எனக்கு சகாயம் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

 📖மாலை வாசகம் – எபிரெயர் 12:1

# மறுபடியும் சுமக்க முடியாத பாரங்களா?

சந்தைக்கு செல்லும்படிக்கு, ரயில் வண்டியிலே ஏறிக்கொண்ட தாயானவள், தன் பொதிகளை இறக்கி வைத்து ஆசனமொன்றிலே அமர்ந்து கொண்டாள். சற்று தூரம் சென்ற பின்பு, அடுத்த ரயில் நிலையத்திலே மேலும் சில காய்கறிப் பொதிகளை எடுத்துக் கொண்டு, சீக்கிரமாக ரயிலிலே மறுபடியும் ஏறிக் கொண்டவள், மேலதிகமாக ஏற்றிக் கொண்ட பொதிகளை இறக்கி வைப்பதற்கு இடம் இருந்தபோதும், தனது பையிலே போட்டு, அந்தப் பாரத்தை தான் சுமந்து கொண்டிருந்தாள். இந்த சம்பவத்தை பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கும், பின்பு அதை கேட்கின்றவர்களுக்கும் சற்று நகைப்புக்குரியதாக இருக்கலாம். ஆனால், சில விசுவாசிகளுடைய வாழ்க்கையானது இந்த சம்பவத்திற்கு ஒத்ததாகவே போய் கொண்டிருக்கின்றது. நம்மை அழைத்த தேவன் சர்வ வல்லமையுள்ளவர், அவர் உண்மையை காக்கின்ற தேவன். அவரிடத்திலே தங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்து, எல்லா பாவ, பார சுமைகளையும் அவரிடம் இறக்கி வைத்து, நன்றாக ஆரம்பிக்கின்றார்கள். ஆண்டவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட நாள் மிகவும் பாக்கியமுள்ள நாள் என்று கொண்டாடுகின்றார்கள். நாட்கள் கடந்து செல்லும் போது, புதிய சுமைகளை தங்கள் மேல் ஏற்றிக் கொண்டு, அந்த சுமைகளின் அழுத்தத்தை தாங்க முடியாமல், நான் ஏன் இப்படியான பாரங்களை சுமக்க வேண்டும் என்று நொந்து கொள்கின்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, உங்களை அழைத்த தேவன், நீங்கள் சுமக்க முடியாத பாரங்களை சுமக்கும்படி அழைக்கவில்லை. ஆண்டவர் இயேசுவை அறியாத நாட்களிலே, நான் செய்து முடிப்பேன் என்று சுயபெலத்திலே தங்கி வாழ்ந்து வந்தீர்கள். “நான்” என்று வாழ்ந்து வந்த நாட்களை விட்டு. அந்த நாட்களை கடந்து, ஆண்டவர் இயேசுவோடு வாழு ம்படி அழைப்பை பெற்றிருக்கின்றோம். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று கூறிய ஆண்டவர் இயேசு, நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராக இருக்கின்றார். எனவே, எனக்கேன் இந்த சுமை? நான் ஏன் சுமக்க வேண்டும் என்னும் சுய பெலத்தின் தொனியை உங்களைவிட்டு அகற்றி, என் இயேசு என்னோடு இருக்கின்றார் என்ற பெலத்தோடு, இயேசுவை நோக்கி, உங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுங்கள்.

**மத்தேயு 11:29**

**உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.**

**ஜெபம்**: இளைப்பாறுதல் தருவேன் என்று வாக்குரைத்த தேவனே, நீர் எப்போதும் என்னோடு இருக்கின்றீர் என்ற உணர்வுள்ள இருதத்யதோடு, நியமித்த ஓட்டத்தை ஓடி முடிக்க எனக்கு பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உபயோகமுள்ள பாத்திரம்

அக்காலத்திலே, தேவ ஜனங்கள் எகிப்து தேசத்திலே அடிமைகளாக துன்பப்பட்டுகொண்டிருந்த நாட்களிலே, மோசே பிறந்து, திவ்விய சவுந் தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான். அவன் வெளியே போட்டுவிடப்பட்டபோது, பார் வோனுடைய குமாரத்தி அவனை எடுத்துத் தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள். மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்க ப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான். திவ்விய சவுந்த ரியவனாயிருந்த மோசேயானவன், தேவனாலே முன்குறிக்கப்பட்டவன். அவனுடைய நாற்பது வயதிலே,

**யாத்திராகமம் 3:12**

**அதற்கு அவர்: நான் உன் னோடே இருப்பேன்;**

அவன் கல்வியிலும், வாக்கிலும், செய்கையிலும் வல்லமையுள்ளவனாக இருந்தான். நான் என்று சொல்வதற்கு அவனிடம் அநேக உலக காரி யங்கள் இருந்தது. ஆனாலும், தேவனுடைய நேரம் இன்னும் வரவி ல்லை. அவன் எகிப்தைவிட்டு ஓடிச்சென்று, நாற்பது வருடங்கள் ஆடு களை மேய்பவனாக இருந்து வந்தான். அவனுக்கு எண்பது வயதா னபோது, நான் என்று கூறுவதற்கும், எனக்கு இன்ன வல்லமை உண்டு என்றுசொல்வதற்கும் அவனிடம் எதுவும் இருக்கவில்லை. அந்த வேளை யிலே தேவனாகிய கர்த்தர் மோசேயை அழைத்தார். அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம் என்றான். இப்படியாக நான் என்று சொல்வதற்கு ஒன்றுமில்லாதிருந்த மோசே வழியாக தாம் முன்குறித்த காரியத்தை தேவனாகிய கர்த்தர் நிறைவேற்றி முடித்தார். பிரிய மானவர்களே, சிலர் பிறப்பாலே சிறப்பு குடிமக்களாக இருக்கின்றார்கள். வேறு சிலர், உலக கலைகளை கற்று தேர்ந்ததாலே உலகத்திலே பிரபுக்களாக இருக்கின்றார்கள். இன்னும் சிலர், தங்கள் தாங்கள் சேர்த்துக் கொண்ட ஆஸ்திகளாலே பெரும் அந்தஸ்துள்ளவர்களாக இருக்கின் றார்கள். இவைகள் யாவும் இந்த உலகத்திலே சில காரியங்களை நடப் பித்து முடிக்கலாம். ஆனால், இவைகளினாலே ஒருவனும் தேவனுடைய அழைப்பை பெற்றுக் கொள்ளவும், அவருடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்கவும் முடியாது. எனவே, நீங்கள் எப்படிபட்டவர்களாக இருந் தாலும், எந்த வயதுடையவர்களாக இருந்தாலும், உங்களைத் தாழ்த்தி, உங்கள் இருதயத்தை தேவனிடத்தில் முற்றாக ஒப்புக் கொடுங்கள். அப்பொழுது, நீங்கள் தேவசித்தத்தை நிறைவேற்றும் தேவனுக்கு உகந்த பாத்திரங்களாக இருப்பீர்கள்.

**ஜெபம்:** என்னை அழைத்த தேவனே, உம்முடைய சித்தம் செய்ய தங் களை ஒப்புக் கொடுத்த உம்முடைய தாசர்களைப் போல நானும், என்னை தாழ்த்தி உம்முடைய சித்தத்திற்கு முற்றாக ஒப்புக் கொடுக்கும் இருதய த்தை தந்தருள்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பயப்படாதிருங்கள்!

**1 இராஜாக்கள் 19:9**

**எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்றார்.**

ஆகாப் என்னும் இஸ்ரவேலின் ராஜா, புறஜாதியாகிய சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம்பண்ணினதுமல்லாமல், அவன் போய் அந்நிய விக்கிரகங்களாகிய பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு, தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப் பலிபீடத்தை எடுப்பித்தான். ஒரு சமயம் அவனுடைய மனைவியாகிய யேசபேல், கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியாவை கொன்றுபோடும்படி வகை தேடியதை, தேவ மனுஷனாகிய எலியா கேள்விப் பட்ட போது, அவளுக்கு பயந்ததால், தன் உயிரைக் காக்கும்படி, தப்பியோடி, ஓரேப் பர்வதத்தில், ஒரு கெபிக்குள் போய்த் தங்கினான் இதோ, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, அவர்: எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம் என்றார். அதற்கு அவன்: சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகு பக்திவைராக்கியமாயிருந்தேன் இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள் உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள் நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன் என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்றான். இந்த சம்பவத்திற்கு ஒத்ததாகவே, சில வேளைகளிலே சில விசுவாசிகள் நினைத்துக் கொள்கின்றார்கள். அதற்கு நாமும் விதிவிலக்கானவர்கள் அல்லர். நான் ஒருவன் மாத்திரம் பக்தி வைராக்கியமாக இருக்கிறேன். உண்மையுள்ளவர்கள் ஒருவருமில்லை. நான் கிறிஸ்தவன் என்பதை வேலையிடத்தில் அறிந்து கொண்டால் என் வேலைக்கு என்ன ஆகுமோ? கர்த்தரை சேவிப்பதினால், அதிகாரிகளால் எனகு பொல்லாப்பு நேரிடுமோ? இயேசுவின் நாமத்தை அறிக்கையிட்டால் நண்பர்கள் உறவினர்கள் என்னை தள்ளிவிடுவார்களோ என்று மனிதர்களுக்கு பயந்து, மறைவான வாழ்க்கை வாழ்கின்றார்கள். கர்த்தர் எலியா செய்ய வேண்டிய காரியம் என்ன என்பதை கூறி, அவனை நோக்கி: பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்றார். பிரியமான சகோதர சகோதரிகளே, ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, நீர் பட்சத்தில் இருக்கின்றீர் என்பதை உணர்ந்து, மனிதர்களுக்கு பயப்படாமல், உம்முடைய சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்ற பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | டிசம்பர் 20

📖 மாலை வாசகம் – யோசுவா 1:9

# சோர்ந்து போகாதே

ஒரு சமயம், அந்நிய ஜனங்களின், கைகளானது தேவ ஜனங்களின்மேல் பலத்துக்கொண்டபடியால், தேவஜனங்கள் தங்களுக்கு மலைகளிலுள்ள கெபிகளையும் குகைகளையும் அரணான ஸ்தலங்களையும் அடைக்கலங்களாக்கிக்கொண்டார்கள். தேவ ஜனங்கள் விதை விதைத்திருக்கும் போது, பல அந்நிய ஜாதிகள் வெட்டுக்கிளிகளைப்போல் எண்ண முடியாத திரளான ஓட்டகங்களில் வந்து, அவர்களுக்கு விரோதமாய் எழும்பி வந்து நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, ஆகாரத்தையாகிலும், ஆடுமாடுகள் கழுதைகளையாகிலும் வைக்காதே போவார்கள். இதனால் தேவ ஜனங்கள் வெகுவாய் ஒடுக் கப்பட்டிருந்தார்கள். தேவ ஜனங்களை, இந்த அவல நிலைமையி லிருந்து விடுதலை செய்யும்படி, தேவனானவர், கிதியோன் என்னும் மனிதனை அழைத்தார். அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் என் ஜனங்களை எதினாலே ரட்சிப்பேன் இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான். கர்த்தரோ அவனை நோக்கி: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ. உன்னை அனுப்புகின்றவர் நானால்லவோ, நான் உன்னுடனேகூட இருப்பேன் என்றார். எளிமையான கிதியோனின் தலைமையில், முந்நூறு மனிதர்களோடு, ஆயுதங்கள் ஏதுமின்றி, பலத்த அந்நிய ஜாதிகளிடத்திலிருந்து, பெரிதான விடுதலையை தேவனாகிய கர்த்தர்தாமே கட்டளையிட்டார். பிரியமானவர்களே, இன்று உங்கள் கண்களுக்கு முன்பாக இருக்கும் மலை போன்ற பிரச்சனை என்ன? கர்த்தரின் வார்த்தையின்படி வாழ்வதினால், உங்களை எதிர்ப்பர்வர்கள், வெகுவாய் பலத்திருக்கின்றார்கள் என்று எண்ணி கலங்குகின்றீர்களா? உங்களை அழைத்த கர்த்தர் கைவிடுவாரோ? அவர் ஒருபோதும் கைவிடமாட்டார். கர்த்தர் பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை ஓயப்பண்ணுகிறார். வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார் இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார். எனவே, அவருடைய பலத்த கரத்தினாலே உண்டாகும் விடுதலையை காணுமட்டும், அவருடைய நேரத்திற்காக காத்திருங்கள். கர்த்தர் உங்கள் இரட்சகராக இருப்பதால் நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களுக்கு இருக்கும் கொஞ்ச பெலத்தோடு, தேவனுக்கு முன்பாக உண்மையுள்ள வர்களாக இருங்கள். விசுவாசத்திலே உறுதியாய் நிலைத்திருங்கள்.

**நியாயாதிபதிகள் 6:14**

**கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ;**

**ஜெபம்**: சிறுமையும் எளிமையுமான என்னை நினைவுகூரும் தேவனே, உலகத்தினால் உண்டாகும் சவால்களை கண்டு நான் சோர்ந்து போகாமல், விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவை தரித்த வாழ்க்கை

முற்றிலும் கனிதரும் உயர்குலத் திராட்சைசெடியிலே, பல கிளைகள் இருந்தது. அந்த கிளைகளில் சுவையான கனிகள் குலைகுலையாக தொங்கியது. சில போகங்கள் கடந்து சென்ற பின்பு, அந்த மரத்தின் ஒரு கிளையானது, உலர்ந்து போவதைக் கண்ட தோட்டக்காரன், ஏன் இப்படி ஆயிற்று என்று ஆராய்ந்து பார்த்தபோது, அந்த கிளையானது, திராட்சைசெடியிலிருந்து நறுக்கப்பட்டிருப்பதைக் கண்டான். அதனால், நாளடைவில் அந்தக் கிளை உபயோகமற்றதாக உலர்ந்து போயிற்று. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதாமே, தம்முடைய சீஷர்களை நோக்கி: நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான் அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகி றார்கள் அவைகள் எரிந்துபோம் என்று கூறினார். கிறிஸ்தவ வாழ்க்கை யானது, பெயரளவிலான வாழ்க்கையல்ல. அது கிறிஸ்துவோடு நாம் வாழும் வாழ்க்கை. கிறிஸ்து நம்மில் தரித்திருக்கும் வாழ்க்கை. கிறிஸ்துவின் சாயலிலே நாள்தோறும் வளர்ந்து பெருகும் வாழ்க்கை. நன்றாக கவனியுங்கள், அந்தக் காலத்திலே குலைகுலையாக சுவையான கனிகளை கொடுத்தேன், இன்று கனியற்றிருக்கின்றேன் என்று ஒரு விசுவாசியானவன் கூறுவானாக இருந்தால், அவன் திராட்சை செடியிலிருந்து நறுக்கப்பட்ட அந்த கனியற்ற உலர்ந்த கிளைளைப் போல இருப்பான். தன்னை கிறிஸ்துவுடையவன் என்று சொல்லுகின்றவனுடைய வாழ்விலே, பரிசுத்த வேதாகமம் கூறும் கனிகள் காணப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட ஆரம்ப நாட்களிலே என்னிருதயத்தில் கசப்பு, வன்மம், பகை இருந்த தில்லை. ஆனால் இன்று எப்படியோ அவை இருதயத்திலே உள்ளிட்டு விட்டது என்று ஒரு ஊழியனோ, விசுவாசியோ தனக்குள்ளே உணர்ந்து கொள்வானாக இருந்தால். அவன் வாழ்க்கையிலே மாம்ச இச்சை இருப்பதினாலே, அவன் தன் வாழ்க்கையை வேத வார்த்தையின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்த்து, மனந்திரும்பி, தன்னை சீர்செய்து கொள்ள வேண்டும்.

**யோவான் 15:6**

ஒருவன் என்னில் நிலைத் திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்;

**ஜெபம்**: பலன் கொடுக்கும் வாழ்க்கைக்கு என்னை அழைத்த தேவனே, நான் எக்காலத்திலும் வேத வார்த்தையில் நிலைத்திருக்கின்றவனாக வாழ்ந்து, நல்ல கனிகளை கொடுக்கும்படிக்கு என்னை உணர்வுள்ளவனாககுவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இலக்கை நோக்கிய பயணம்

> **பிலிப்பியர் 3:12**
>
> நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.

தன் வாலிப நாட்களிலிருந்து மிகவும் கடினமாக உழைத்து வந்த மனிதனானவன், வேலையிலிருந்து ஓய்வு பெறும் நாட்கள் அண்மித்திருப்பதை குறித்து மிக மகிழ்ச்சியாயிருந்தான். வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின்பு, நான் மிகவும் கடினமாக பிரயாசப்பட்டேன். பிள்ளைகளுக்கு வேண்டிய யாவையும் மிகையாக செய்து கொடுத்தேன். எனவே, மிகுதியான நாட்களை நான் உல்லாசமாக கழிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டான். பல நாடுகளுக்கு சுற்றுலா செல்வதிலும், கப்பலிலே உல்லாசப் பயணம் செய்வதிலும், பணத்தையும், நேரத்தையும் செலவு செய்து வந்தான். அது அவனுடைய வாழ்க்கையின் தீர்மானம். இப்படியாக மனிதர்கள் தங்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்று, நாட்களை தங்கள் சொந்த விருப்பப்படி உல்லாசமாக கழிப்பதுபோல, ஒரு கிறிஸ்தவனானவன், இந்தப் பூமியில் வாழும்வரை, கிறிஸ்தவ வாழ்விலிருந்து ஓய்வு பெற முடியாது. நாம் சில ஊழிய பொறுப்புக்களிலிருந்து ஓய்வு பெற வேண்டிய நாட்கள் வரும் ஆனால், நான் மிக கடுமையாக ஊழியம் செய்தேன், மினஷரியாக பல நாடுகளுக்கு சென்று, பல பாடுகள் துன்பங்கள் மத்தியிலே ஊழியம் செய்தேன். சபையிலே அநேக பொறுப்புக்களிலிருந்தேன். அது போதும், இனி நான் என் விருப்பப்படி வாழ்வேன் என்று விசுவாசியானவனும் கூற முடியாது. நாம் நம் வாழ்நாட்கள் முழுவதும் கிறிஸ்துவின் சாயலில் நாளுக்கு நாள் வளர்ந்து பெருக வேண்டும். கனி கொடுத்து ஓய்ந்த மரம்போல நம்முடைய வாழ்க்கை இருக்கமுடியாது. வேதபாடங்கள், பிரசங்கங்கள், அனுபவங்கள் வாயிலாக கற்றுக் கொண்டவைகள் எப்போதும் நாம் நம் வாழ்வில் செயற்படுத்துகின்ற வர்களாக காணப்பட வேண்டும். நாம் ஊழியர்களாக இருந்தாலும், விசுவாசிகளாக இருந்தாலும், நான் அனுபவமுள்ளவன், முற்றிலும் தேறினவன் என்று எண்ணி போதிக்கப்படமுடியதா நிலையை அடை ந்துவிடக் கூடாது. நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமு தல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, மகிமையிலே சேரும் நாள் வரைக்கும் ஒரே சிந்தையாயிருக்க வேண்டும். பரம பந்தையப் பொருளை நோக்கி முன்னேறுகின்றவர்களாக இருக்க வேண்டும்.

**ஜெபம்**: என் பலத்த அடைக்கலமான தேவனே, நான் உம்மையே நம்பியிருக்கின்றேன். முதிர்ந்தவயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இருப்பீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீங்கள் எப்படியாக ஆயத்தப்படுகின்றீர்கள்?

ஆண்டவராகிய இயேசு இந்த பூவுலகிற்கு வந்த நாளை இம்மாத்திலே நாம் நினைவுகூருகின்றோம். அதை முன்னிட்டு பற்பல காரியங்களை இந்த உலகிலே மனிதர்கள் செய்து வருகின்றார்கள். வியாபார ஸ்தாபனங்கள் பெரும் விற்பனைக்காக, பலவிதமான விளரம்பங்களோடு ஆயத்தப்படுகின்றார்கள். கொள்வனவு செய்வோர், பல பொருட்களை வாங்கும்படிக்கு, கடுமையாக உழைத்து சேமிக்கின்றார்கள். வீடுவாசல்களை அலங்கரித்து, புத்தாடைகளை வாங்கி, பரிசுப் பொருட்களை ஆயத்தப்படுத்துகின்றார்கள். தானதர்மங்களை செய்கின்றவர்கள், இந்நாட்களிலே வறுமையினாலே வாடும் மனிதர்களுக்கு இன்னும் அதிகமாக உதவிகளை செய்ய வேண்டும் என்று பிரயாசப்படுகின்றார்கள். இது மகிழ்ந்து களிகூரும் நாட்கள் என்று சொல்லி, மதுபானங்களை வாங்கி களியாட்டங்களுக்காக பலர் தங்களை ஆயதப்படுத்திக் கொள்கின்றார்கள். தாங்கள் கிறிஸ்தவர்கள் என்ற நாமத்தை தரித்ததினால், வருடத்தில் ஒருமுறையாவது, ஆலயத்திற்கு செல்ல வேண்டும் என்று ஒருசாரார் மனதிலே தீர்மானித்துக் கொள்கின்றார்கள். காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்ற பிரகாரமாக இன்னுமொரு சாரர், இந்நாட்களிலே அதிமாக உழைத்துக் கொள்ளலாம் என்று ஆலயத்திற்கு செல்லாமால் தங்கள் வேலைகளிலே அதிக கவனம் செலுத்துகின்றார்கள். வேறு சிலர் நத்தார் கானங்களைபாடி அநேகரை கூட்டி நத்தார் நிகழ்ச்சியை நடத்துவோம் என்று பிரயாசப்படுகின்றார்கள். இவ்வண்ணமாக உலகமெங்கும் மனிதர்கள் பரபரப்புள்ளவர்களாக, பற்பல விதமாக செயற்படுகின்றார்கள். நீங்கள் எவ்வண்ணமாக பரமன் இயேசு இந்த பூவுலகிற்கு வந்த நாளை நினைவுகூரும்படி ஆயதப்படுகின்றீர்கள்? உங்களுக்கு ஒரு இரட்சகரை அனுப்புவேன் என்று வாக்குரைத்த பிதாவாகிய தேவன், தீர்க்கதரிசிகள் வாயிலாக முன்னுரைத்த படியே, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இரட்சகரை அனுப்பி, தம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். இரட்சகராகிய இயேசு, தம் திருப்பணியை இந்த பூவிலே நிறைவேற்றி, புதிதும் ஜீவனுமான பரலோம் செல்லும் மார்க்கத்தை நமக்கென்று ஏற்படுத்தி, நம்மை அதற்குள் அழைத்திருக்கின்றார். "நான் மறுபடியும் வருவேன்" என்று கூறி சென்ற கர்த்தராகிய இயேசு மறுபடியும் வருவார். எனவே, வாக்கு மாறாத தேவனாகிய கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தை பற்றி கொண்டவர்களாக, கர்த்தருடைய பிறப்பை நினைவு கூரும் இந்நாட்களிலே, நாம் தேவ பக்தியோடும், பரிசுத்தத்தோடும், நம்முடைய இரட்சிப்பு நிறை வேறப் பிரயாசப்படுவோமாக.

**பிலிப்பியர் 1:13**

**உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.**

**ஜெபம்:** அந்தகாரத்தினின்று உம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு என்னை வரவழைத்த தேவனே, இந்நாட்களிலே நான் உம்முடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும்படி பிரயாசப்பட எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சுடர்களைப் போல பிரகாசியுங்கள்

இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது. அந்த திவ்விய ஒளியானது நம்மை பிரகாசிப்பித்தது. நம்மை மீட்க, தம்மை கொடுத்த, ஆண்டவராகிய இயேசு வழியாக அந்த ஜீவ ஒளியை தரித்திருக்கின்றோம். தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் வேறு பிரிக்கப்பட்டிருக்கின்றோம். எதற்காக நாம் இத்தனை மகத்துவள்ள பதவியை இலவசமாக பெற்றுக் கொண்டோம்?

**பிலிப்பியர் 2:14**

**ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள்,**

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாக வாழ வேண்டும். அப்படி வாழ்வதென்றால், தேவனுக்கென்று நாம் செய்யும் எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும், தர்க்கிப்பில்லாமலும் செய்ய வேண்டும். இந்த உலகத்திற்கு ஒளியாக இருக்க வேண்டிய நாம், நம் நடுவே இருளை உருவாக்குவோமாக இருந்தால், நாம் ஜீவ ஒளியை அல்ல, இருளையே நாடித் தேடுகின்றவர்களாக இருப்போம். “தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை. இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு, உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்” (1 யோவான் 1:5-7). எனவே, இந்நாட்களிலே, நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் முதலாம் வருகையை நினைவுகூருகின்ற நாம், அவருடைய இரண்டாம் வருகைக்காக எப்போதும் ஆயத்தப்படுகின்றவர்களாக காணப்பட வேண்டும். பிரியமானவர்கனே, முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள் முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள். இந்த உலகத்திற்கு அந்நியர்களும் பரதேசிகளுமா யிரு க்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி,இந்த உலகத்தின் இருளுக்குள் மறுபடியும் செல்லாமல், ஜீவ வசனத்தை இறுகப்பற்றிக் கொண்டவர்களாக, நம் நண்பர்கள், உறவினர்கள், சக விசுவாசிகள் நடுவே சுடர்களைப் போல பிரகாசிப்போமாக.

**ஜெபம்:** பரலோக தேவனே, உமக்கு பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாக கட்டப்பட்டுவரும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஒருவரும் கெட்டுப்போகாமல்...

"அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவ் வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்ப டாதிருங்கள் இதோ, எல்லா ஜன த்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்க ளுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த் தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணை யிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள் இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்." (லூக்கா 8:12). ஆம், தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தி யஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலக த்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16). தேவ கிருபையினாலே விசுவா சத்தைக்கொண்டு இந்த மகத்துவமான இரட்சிப்பை நாம் பெற்றுக் கொண்டோம். நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையி ன்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். அந்த பாவ சாப கட்டுகளிலில் உணராமல் வாழ்ந்து வந்த நம்மை, விடுதலையாக்கும்படிக்கு தேவ தயவு நம்மேல் வெளிப்பட்டது. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைக ளினால் உண்டானதல்ல. பிதாவாகிய தேவன்தாமே, தம்முடைய திருக் குமாரனாகிய இயேசுவை நமக்காக கொடுத்தார். அவரோடே கூட நம க்கு தேவவையான யாவற்றையும் அருளியிருக்கின்றார். எனவே, இந்நா ட்களிலே, நாம் மிகவும் உணர்வுள்ளர்களாய், ஞானமாய் நடந்து கொள்ள வேண்டும். ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையவேண்டும் என்ற நோக்கமானது நிறைவேறும்படி, இந்த சமா தானத்தின் நற்செய்தியை அறிவிக்க வேண்டும். அத்தோடு, அந்த நற் செய்தியானது நம்மில் முற்றிலும் நிறைவேறும்படிக்கு, முற்காலத்து மாம்ச கிரியைகள் நம்மை ஆளுகை செய்யாத தபடிக்கு, நம்முடைய இருத யத்தை எல்லாக் காவலோடு காத்துக் கொள்ள வேண்டும்.

**ரோமர் 8:32**

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

**ஜெபம்**: உம்முடைய திருகுமாரனாகிய இயேசுவின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருத்த பிதாவே, அவருடைய சாயலுக்கு ஒப்பாகும் கிரியைகளையே என் வாழ்வில் நடப்பிக்க எனக்கு பெலன் தருவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | டிசம்பர் 26 | 📖 மாலை வாசகம் – 1 தீமோ 6:9–10

# உலக பொருட்களின் எல்லை

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியானவனின் வாழ்க்கையிலே ஏற்பட்டிருந்த பொருளாதர நெருக்கடியினிமித்தம் அவனுடைய குடும்பம் பல கஷ்டங்களை எதிர் நோக்க வேண்யிருந்தது. குடும்பத்தின் பிழைப்பிற்காக, அவன் தன் வீட்டிற்கு முன்பாக ஒரு சிறிய கொட்டில் கடையைப் போட்டு, தன் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளை விற்றுவந்தான். அந்த வியாபாரமானது முன்னேற்றம் கண்டது. மாதங்கள் கடந்துசென்ற போது, அவனுடைய குடும்பத்தேவைகளை சந்திக்கத் தேவையான அளவு இலாபம் அவனுக்கு கிடைத்தது. அத்தோடு, வார இறுதி நாட்களிலே பட்டணத்திலே கூடும் சந்தையிலும் ஒரு கடையை ஆரம்பித்தான். அதிலும் அவன் விருத்தியடைந்தான். தாராளமாய் உழைத்து வந்த அவன், அடுத்த ஊர்களிலும் ஒரு கிளையை ஆரம்பித்தால் இன்னும் அதிகமாக உழைக்கலாம் என்று மனதிலே தீர்மானம் செய்து கொண்டு, கிளைகளை படிப்படியாக ஆரம்பித்தான். அவன் வியாபாரமானது பிரபல்யமடைந்தது. இப்படியாக வியாபார விருத்தி ஏற்பட்டதினால், கர்த்தருடைய கரம் தன்னோடு இருக்கின்றது என்று அவன் எண்ணிக் கொண்டான். ஆனால், அவனுக்கு இப்போது, ஜெப கூட்டங்களுக்கு செல்ல நேரம் இல்லை. உபவாச கூட்டங்களில் பங்குபற்ற முடியவில்லை. அதிகாலையில் எழுந்தவுடன் கர்த்தருடைய வசனத்தை தியானிக்க நேரமில்லை ஏனெனில், தன் வியாபாரத்தை நடத்துவதிலும், பணத்தை சேகரிப்பதிலும், நிலங்களை வாங்கி, காய்கறி தோட்டங்களை விருத்தி செய்து, கடைகளை புனரமைப்பதிலேயே அவன் அதிக திட்டம் போட வேண்டியிருந்தது. பிரியமான சகோதர சகோதரிகளே, அந்த விசுவாசியானவனின் குடும்பத்தில் பொருளாதார தேவை இருந்தது உண்மை, ஆனால் அந்தத் தேவையானது அவனுடைய மனதிலே எப்போது இச்சையாக மாறியது என்பதை சிந்தித்துப் பாருங்கள். இன்று சில தேவ பிள்ளைகளும் இவ்விதமாக இழுப்புண்டு போய்விடுகின்றார்கள். இந்த உலகத்தின் ஆஸ்திகள் பெருகினால், தேவன் அவனோடு இருக்கின்றான் என்று கூறிவிடுவது சரியாகுமோ? அப்படியானால், இந்த உலகத்திலே தேவனையறியாதவர்கள் பெரும் ஐசுவரியவான்களாக இருக்கின்றார்கள் அல்லவா? எனவே, பொருளாசையின் இச்சை உங்கள் இருதயங்களை ஆண்டு கொள்ளாதபடிக்கு, அவைகளுக்கு ஒரு எல்லையை வைத்துக் கொள்ளுங்கள். பண ஆசை வந்தால், எல்லாத் தீமைகளும் அதனோடு கூடி வரும்.

**யாக்கோபு 1:14**

**அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்ற எண்ணம் என் இருதயத்தில் ஒவ்வொரு நாளும் பெருகும்படிக்கு கிருபை செய்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அருமையான சந்தர்ப்பங்கள்

தங்களுடைய ஒரே மகனானவனை, படித்து ஆளாக்க வேண்டும் என்ற நிச்சயத்தோடு, தாங்கள் சிறுமையிலும் பட்டினியிலும் கடினமாக உழைத்து, அவனை ஊரிலுள்ள சிறந்த பாடசாலையில் சேர்த்து, அவன் கல்விக்கு வேண்டிய வசதிகள் யாவற்றையும் செய்து கொடுத்தார்கள். அவன் படித்து பட்டம் பெற்று, ஊரிலே ஒரு நல்ல கம்பனியிலே வேலை பார்த்து வந்தான். சில வருடங்களுக்கு பின்னர், நாட்டின் மறுபகுதிலுள்ள பட்டணமொன்றிலிருந்த உலக பிரசித்தி பெற்ற கம்பனியில் பதவியுயர்வுடன், உயர்ந்த சம்பளமும், பலசலுகைகளுடனுமான வேலைக்கு அழைப்பு வந்தது. அதைக் குறித்து தன் மனதிலே சில நாட்களாக சிந்தித்துக் கொண்டிருந்தான். பின்னர், தான் அந்த வேலையை எடுக்கப்போவதில்லை என்று, அந்த கம்பனியின் உபதலைவருக்கு நன்றியை செலுத்தி, மறுமொழியை அனுப்பி வைத்தான். அவனுடைய பெற்றோர் அவனை நோக்கி: மகனே, ஏன் இப்படியான நல்ல சந்தர்ப்பத்தை விட்டுவிட்டாய் என்று கேட்டார்கள். அதற்கு அவன், உங்கள் வாழ்க்கையின் பெலனுள்ள காலம் முழுவதும், நான் வாழ வேண்டும் என்று எனக்காக அர்ப்பணித்தீர்கள். இப்போது, நீங்கள் பெலனற்று இருக்கின்ற காலத்திலே நான் உங்களோடு இருந்து, உங்களை பார்த்துக் கொள்வதே என்னுடைய அருமையான சந்தர்ப்பம் என்று கூறினான். அதைக் கேட்ட பெற்றோர், ஆனந்த கண்ணீரோடு, மனதிலே தங்கள் மகனானவனைக் குறித்து பெரும் மகிழ்ச்சியடைந்தார்கள். பிரியமானவர்களே, இன்று மனிதர்கள், கல்வி, வேலை, ஆஸ்தி, அந்தஸ்து இவைகளையே அருமையான சந்தர்ப்பங்கள் என்று கருதி, வாழ்வின் கருப்பொருளை உணரமுடியாமல் வாழ்கின்றார்கள். அவர்களோடுகூட சில தேவ பிள்ளைகளும், தேவன் தங்களுக்கு கொடுத்திருக்கும் அருமையான சந்தர்ப்பங்களை உதறி தள்ளிவிட்டு, இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரித்தவர்களாகும்படிக்கு தங்களை ஒப்புக் கொடுத்து, தங்கள் மனக் கண்களை குருடாக்கி கொள்கின்றார்கள். நீங்கள் வெளி ஊருக்கு சென்று வேலை செய்யக்கூடாது என்பது பொருளல்ல. மாறாக, தேவனை அறியாதவர்கள் இந்த உலகத்திலே நடந்து கொள்வது போல, கல்வி, வேலை, ஆஸ்தி, அந்தஸ்து போன்றவைகளை வாழ்வின் முன்னேற்றித்தின் அளவுகோலாக வைத்திருக்காமல், தேவன் உங்கள் வாழ்வில் கொடுத்திருக்கும் அருமையானதும் நன்மையானதுமான சந்தர்ப்பங்களை ஆராய் ந்து அறிந்து கொள்ளுங்கள்.

**ரோமர் 12:2**

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்,**

**ஜெபம்**: தாயின் கருவில் என்னை தெரிந்து கொண்ட தேவனே, நான் என் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உணர்ந்தவனாக, நீர் கொடுத்த அருமையான சந்தர்ப்பங்களை பயன்படுத்த கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# முதன்மையானது எது?

"உங்கள் சந்ததி இந்த உலகிலே கஷ்டங்களை சகித்து, நித்திய ஜீவனை அடையலாம் அல்லது இந்த உலகிலே சுகபோகமாக வாழ்ந்து நித்திய ஜீவனை இழந்து போகலாம்" என்று இரண்டு தெரிவுகள் உங்களுக்கு கொடுக்கப்பட்டால், நீங்கள் எதைத் உண்மையாக தெரிந்து கொள்வீர்கள்? இந்த உலகிலே அடிப்படைத் தேவைகளை சந்திப்பதற்கு இன்று கல்வி அவசியமான தொன்றாக காணப்படுகின்றது. ஆனால், எவ்வளவாய் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதைக் குறித்துஒரு விசுவாசியானவன் கருத்துள்ளவனாய் இருக்க வேண்டும். இந்த உலகத்தின் காரியங்களில் தேவையானவைகளை மட்டும் அளவாய் எடுத்துக் கொண்டு, பரம பந்தையப்பொருளின் இலக்காகிய நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி ஆர்வத்தோடு முன்னேற வேண்டும். ஏனெனில், ஒருவன் இந்த உலகத்தின் காரியங்களிலே இச்சை கொள்வானாக இருந்தால், அவன் இருதயத்தில் அந்த இச்சையாக பெருக ஆரம்பிக்கும். அதுவே, அவனை தேவனிடமிருந்து தூரப்படுத்தும், கண்ணியாக அவனுக்கு மாறிவிடுகின்றது. பிள்ளைகள் கற்க வேண்டும், நல்ல உத்தியோகத்திலே அமர்ந்து பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்காமல் வாழ வேண்டும் வேண்டும் என்பதை பெற்றோர்கள் விரும்புகின்றார்கள். அந்த நோக்கத்தில் தவறு இல்லை. ஆனால், வாழ்க்கையில் முதன்மையானதும் அவசியமானது எதுவென்பதையும் நாம் முதலாவதாக உணர்ந்து அதை பற்றிக் கொள்ள வேண்டும். பின்பு, அதை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்து, அதன்படிக்கு, கர்த்தரை தேடுகின்ற காரியங்களை அவர்கள் வாழ்வில் முதன்மைப்படுத்தி, அவர்களை கர்த்தருடைய வழியிலே நடப்பிக்க வேண்டும். அவனவன் தன் தன் சுயஇச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். எனவே, இந்த உலகத்தின் காரியங்கள் பிள்ளைகளின் வாழ்வில் இச்சையாக மாறாதபடிக்கு நாம் கருத்துள்ளவர்களாக இருக்க வேண்டும். மனிதர்கள் ஏன் கல்வியை மேன்மைப் படுத்துகின்றார்கள்? ஏனெனில், நல்ல வேலையை எடுக்க வேண்டும். கைநிறைய உழைக்க வேண்டும் என்பதே கல்வியின் பிரதானமான நோக்கமாக இருக்கின்றது. பண ஆசையானது, பிள்ளைகளின் மனதிலே உருவாகாதபடிக்கு நாம் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனனெனில், பண ஆசையானது எல்லாத் தீமைக்கும் வேராக மாறிவிடுகின்றது.

**பிரசங்கி 4:6**

**வருத்தத்தோடும் மனச்சஞ்சலத்தோடும் இரண்டு கைப்பிடியும் நிறையக்கொண்டிருப்பதைப்பார்க்கிலும், அமைச்சலோடு ஒரு கைப்பிடி நிறையக் கொண்டிருப்பதே நலம்.**

**ஜெபம்:** நாளைய தினத்தைக் குறித்து கவலையடையாதே என்று கூறிய தேவனே, நான் எப்போதும் பரம பந்தையப் பொருளாகிய இலக்கையே முதன்மையாக கொண்டிருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுக்கு உகந்த பாத்திரங்கள்

அக்காலத்திலே, மோசேயானவன் எகிப்தின் சகல கலைகளிலும் தேர்ச் சி பெற்றவனாக இருந்தான். ஆனால், அவனுடைய தேர்ச்சியானது, தேவ னாகிய கர்த்தரை அறிந்து கொள்வதற்கோ அல்லது அவருடைய சித்த த்தை தன் வாழ்வில் நிறைவேற்றி முடிக்கவோ அவனுக்கு உதவவி ல்லை. அதுபோலவே, அப்போஸ்தலனாகிய பவுல், ஆண்டவர் இயேசு யார் என்பதை அறிந்து கொள் வதற்கு முன்பாகவே, பெரும் கல்விமானாக இருந்தபோதும், தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக சபையை துன்பப் படுத்திக் கொண்டிருந்தான். அவ னுடைய கல்வியானது, அவன் கர்த்தர் யார் என்பதை அறிந்து கொள்ளவோ அல்லது தேவனாகிய கர்த்தருடைய சித்தத்தை நிறை வேற்றி முடிக்கவோ உதவவில்லை. அதனால், இப்படியாக கர்த்தராகிய இயேசுவை அறியும் அறிவின் மேன்மைக்காக, தன்னிடத்திலிருந்த மேன்மையான எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன் என்று அறிக்கையிட்டார். சுயபெலனானது, மனிதர்களு டைய மனதிலே இறுமாப்பைஉண்டு பண்ணும். அவைகள் பொவாதுாக, கல்வி, வேலை, செல்வம், அந்தஸ்து போன்றவற்றினாலே மனிதர்களு டைய மனதிலே உருவேற்றப்படுகின்றது. இன்று சிலர் இவற்றினாலே உண்டாகும் செல்வாக்கினால், தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்பத்தி லும், வேலைத் தளங்களிலும், சபை ஐக்கியங்களிலும் தீர்மானங்களை எடுத்துக் கொள்கின்றார்கள். ஆனால், அவை யாவும் தேவனுடைய வார்த்தைக்குள் அடங்கியிருந்தால் மட்டுமே பிரயோஜனத்தை உண்டாக் கும். அவை தேவனுடைய வார்த்தைக்கு எவ்விதத்திலும் விரோதமாக இருந்தால், அந்த சுயபெலத்தினாலே, அவர்களுக்கு சுயதிருப்தி மட் டுமே மிகுதியாக இருக்கும். விசுவாசியானவனின் இருதயத்திலே தேவ னுடைய வார்த்தை நிலைத்திராவிட்டால், அவன் பலனற்ற மரத்தைப் போல இருப்பான். கர்த்தருடைய வசனமானது நம் கால்களுக்குத் தீபமும், நாம் செல்லும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. அவரு டைய கட்டளைகள், பிரமாணங்கள், சாட்சிகள், கற்பனைகள், நீதி நியா யங்கள் யாவும் நாம் இருளிலே தடுமாறாமல், வெளிச்சத்திலே நிதன மாய் நடக்க கற்றுக் கொடுக்கின்றது. அவருடைய வார்த்தைக்கு நம் வாழ்விலே முதலிடத்தைக் கொடுக்கும் போது, அதனால், நாம் நமக்கும் நம்மை சூழந்துள்ள யாவருக்கும் மிகுந்த பலனை உண்டாக்குகின்றவ ர்களாக திகழ்வோம்.

**நீதிமொழிகள் 6:23**

**கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவ வழி.**

**ஜெபம்:** ஜீவமார்க்கத்தை எனக்கு போதிக்கும் தேவனே, நான் என் சுயபெலத்தில் நம்பிக்கை வைத்து மாண்டு போய்விடாதபடிக்கு, உம்மு டைய ஜீவ வார்த்தைகளை பற்றி நடக்க எனக்கு உணர்வுள்ள இருதய த்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்மோடுகூட இருக்கின்றார்

இந்தப் பூவுலகிலே இன்னுமொரு ஆண்டின் முடிவின் நாட்களுக்குள் நாம் வந்திருக்கின்றோம். நிச்சயமாக நாம் யாவரும் பலவிதமான சவால்களை இந்த ஆண்டிலே கடந்து வந்திருப்போம். நம்முடைய பார்வையிலே, நாம் நினைத்த சில காரியங்கள் கைகூடி வந்திருக்கலாம், வேறு சில தாமதித்திருக்கலாம். இன்னும் சில நாம் நினைத்தத்திற்கு எதிராக நடந்து முடிந்திருக்கலாம். நாம் நம்முடைய மட்டுப்படுத்தப்பட்ட அறிவுக்கு எட்டியபடி நம் வாழ்வின் வெற்றியையும் தோல்வியையும் வகுத்துக் கொள்கின்றோம். ஒரு வேளை துன்பங்கள், துயரங்களினால் மனம் சோர்ந்து போன நாட்களை நீங்கள் கடந்து வந்திருக்கலாம். அவைகள் மத்தியிலே ஆண்டவராகிய இயேசு உங்களோடு இருந்தாரோ அல்லது உங்களை மறந்து போனாரோ? என்று நீங்கள் சிந்தித்த நாட்கள் உண்டாயிருக்கலாம். ஒரு சமயம் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள், கர்த்தர் எங்களைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லிக் கொண்டார்கள். கர்த்தர் அவர்களை நோக்கி: ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? ஆவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது என்று கூறினார். சிலவேளைகளிலே நாம் அறிந்தோ அறியாமலோ, பெலவீனமான நாட்களிலே, விசுவாசத்திற்குவிரோதமான காரியங்களை அறிக்கையிட்டுவிடுகின்றோம். நம்மில் அன்புகூர்ந்த தேவனானவர், நம்முடைய பெலவீனத்திற்காக நம்மை தண்டிக்கின்றவர் அல்லர். ஏனெனில், நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். இந்நாள் வரைக்கும் அவர் அவ்வண்ணமாகவே இருந்து வந்தார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கின்றார். எனவே, நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்கு செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குதக்கதாக நமக்கு சரிக்கட்டாமலும்இருக்கின்ற தேவனாகிய கர்த்தராகிய ஸ்தோத்திரப் பலிகளை ஏறெடுப்போம். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது

**மத்தேயு 28:20**

**இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.**

**ஜெபம்**: தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல எனக்கு இரங்குகின்ற கர்த்தாவே, நீர் உமது விருப்பம் போல என்னை நடத்தி முடிவிலே மகிமையிலே ஏற்றுக் கொள்வதற்காக உமக்கு நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அறியாததும் எட்டாதததுமான காரியங்கள்

ஒரு வாலிபனானவன், தன் தகப்பனை நோக்கி: நீங்கள் என் வாழ்வில் அப்படி என்ன காரியங்களை செய்தீர்கள் என்று தன் விரக்தியான நிலையை வெளிப்படுத்தி கொண்டான். வயது முதிர்ந்த தகப்பனானவரோ, தன் மகனானவனின் கண்களை உற்றுப் பார்த்துவிட்டு, தன் மகன்மேல் கோபம் கொள்ளாமலும், எதையும் பேசாமலும், காலங்களும், நேரங்களும் பதில் கூறும் என்று தன் மனதிலே நிர்ணயம் செய்து கொண்டு மௌனமாக இருந்து விட்டார். அந்த வாலிபனுடைய தாயானவள் தன் கணவனை நோக்கி: நீங்கள் ஏன் அவனை கடிந்து கொள்ளாமலும், பதில் ஏதும் கூறாமலும், அவன் போக்கிற்கு விட்டுவிட்டீர்கள் என்று கேட்டார். அதற்கு கணவனானவன்: அவன் அறிந்தது கொஞ்சம், அவன் அறியாததும், அவன் அறிவுக்கு எட்டாதுமான காரியங்களோ அநேகம். அவன் தன் அறியாமையிலே விரக்தியடைந்திருக்கின்றான். குறித்த காலத்திலே யாவற்றையும் அறிந்து கொள்வான் என்று பதிலளித்தார். பிரியமானவர்களே, இந்த வருடத்தின் கடைசி நாளிலே வந்திருக்கும் நாமும், அறிந்தவைகள் கொஞ்சம். அறியாதவைகளோ ஏராளமானதாய் இருக்கின்றது. நம்மீது அன்புகூர்ந்த நம்முடைய பரம பிதாவானவர், ஒரு நன்மையையும் நமக்கு தடை செய்வதில்லை. நாம் கேட்டு, பெற்றுக் கொண்டு நன்றி கூறும் காரியங்கள் ஒரு சில உண்டு. ஆனால் நாம் அறியாததும் நமக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை பிதவாகிய தேவன்தாமே நடப்பித்திருக்கின்றார். செய்வதற்கு அப்படியென்ன பெரிய காரியம் உண்டு என்று கேட்கத் தோன்றுகின்றதா? அந்த இளவயதுடைய வாலிபனைப் போல, நம்முடைய அறிவுக்கு எட்டாதவைகள் அநேகம் உண்டு. இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை என்று தேவனாகிய கர்த்தர் கூறியிருக்கின்றார். நம்முடைய நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, நம் தேவைகளை எல்லாம் அவர் அறிந்திருக்கின்றார். அன்று தம்முடைய ஜனங்களை, ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, அவர்கள் நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும், தேவனாகிய கர்த்தர் அவர்களை சுமந்து கொண்டுவந்தார். அதுபோல இன்றும் இந்நாள்வரையும் நம்மை சுமந்து வந்திருக்கின்றார். எனவே உற்சாகமுள்ள மனதோடு தேவனுக்கு நன்றியை செலுத்துங்கள். அவர் ஒருபோதும் கைவிடமாட்டார். ஆமேன்!

**எரேமியா 33:3**

**என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்; அவைகளின் தொகை எவ்வளவு அதிகம். நீர் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.